C.C.No.212/2018 06.04.2026

PW 2 அண்ணப்பூரணா த/பெ. அய்யங்காளை

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாராணை**

நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பூஞ்சுத்தியில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் பூஞ்சுத்தியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே பாதை சம்மந்தமாக பிரச்சனை உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரச்சனைக்குரிய யார் பெயரில் உள்ளது என்றால் கூட்டு பட்டாவில் உள்ளது, யாருடைய பெயரில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் எதிரிகள் மின் விளக்கை அனைத்து எங்களை அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் என்ன என்றால் மாலை 06.00லிருந்து 07.00 மணி இருக்கும், அந்த சமயத்தில் அய்யன் கோவில் திருவிழா என்றால் இல்லை. எங்கள் ஊா் திருவிழா சமயத்தில்தான் எனக்கும், எனது அம்மா சிவனாயிக்கும், எனது கணவர் அய்யங்காளைக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் அடித்ததனால் ஏற்பட்ட ரத்தக்காயம் படிந்த துணி, அடிக்க பயன்படுத்திய கம்பி ஆகியவற்றை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். சம்பவத்தின்போது எனது செல்போன், 5 பவுன் நகையை எதிரிகள் அபகரித்தாக சொல்லியுள்ளேன், ஆனால் போலீசார் அவர்களது விசாரணையின் அடிப்படையில் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் அவ்வாறு நகையையும், செல்போனை அபகரிக்கவில்லை என்று சொன்ன விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

2) எனது தாயாருக்கு சம்பவத்தில் எங்கு, எங்கு காயம் ஏற்பட்டது என்றால் தலையின் வலது பக்கம், வலது கால், இடது காது, ஆகிய இடங்களில் ரத்தக்காயம் ஏற்பட்டது. எனது தாயருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எந்த மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தோம். எத்தனை நாட்கள் அங்கு சிகிச்சையில் இருந்தார் என்றால் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார், அதன்பின்னர் கோயபுத்துார் தனியார் மருத்துவமனையில் சிசிச்சைக்கு சேர்த்தோம். தனியார் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் 20 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணத்தை போலீசாரிடம் கொடுத்தேமா என்றால் கொடுத்தோம். எனக்கும், எனது தாயார், எனது கணவருக்கும் கலவரத்தில் ஏற்பட்ட காயத்தை மறைத்து, எதிரிகளால் ஏற்பட்ட காயம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இடம் சம்மந்தமாக எதிரிகள் ஊன்றிய கல்லை நான், எனது தாயார், எனது கணவர் பிடுங்கிவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் கல்லை பிடுங்கிய சம்மந்தமாக எதிரிகள் எங்கள் வீட்டில் வந்து கேட்டபோது நாங்கள் எதிரிகள் அடித்து தாக்கினோம் என்றால் சரியல்ல, நாங்கள் அடித்ததனால் 3ம் எதிரி கருப்பையாவிற்கு தலை, தோள்பட்டை, இடது கை ஆகிய இடங்களில் ரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு மேலூரில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல, எங்களுக்கு தான் காயம் ஏற்பட்டது. இது சம்மந்தமாக எதிரிகள் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து அது நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, எந்த காவல்

நிலையத்திலிருந்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் மேலூர் காவல் நிலைய போலீசார் மேலூர் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள்.